# சபாஷ் நாகர் கோவில்

2016-2017 நிதியாண்டில் நாகர்கோவில் மாவட்டம் தரை வழி தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கையிலும் சாதனை படைத்துள்ளது. தரைவழி தொலைபேசி எண்ணிக்கைகள் நாடெங்கிலும் கடுமையாக குறைந்து வரும் வேலையில் நாகர்கோவில் மாவட்டத்தில் இதன் எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகரித்துள்ளது மிக மிக பாரட்டத்தக்கது. தமிழ் மாநிலத்திலேயே நாகர்கோவில் மாவட்டத்தில் மட்டுமே தரைவழி தொலைபேசிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த மாவட்டத்திலும் கடந்த 10 ஆண்டுகளிலும் எண்ணிக்கை குறைந்தே வந்திருந்தது. அது மட்டுமல்லாமல் இந்த 2016-2017 நிதியாண்டில் நாகர்கோவில் மாவட்டம் 50 கோடி ரூபாய்களுக்கு மேல் லாபம் ஈட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக உழைத்திட்ட நாகர்கோவில் மாவட்ட BSNL ஊழியர்களையும், அதிகாரிகளையும் ஒப்பந்த ஊழியர்களையும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் மனதார பாராட்டுகிறது. நாகர்கோவில் மாவட்டத்தை சார்ந்த நமது மாநில, மாவட்ட சங்கத் தலைவர்களும் இதற்கான பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர். குமரியில் இன்று துவங்கியுள்ள இந்த சாதனை நாடு முழுவதும் பரவட்டும். நமது BSNL ஒட்டுமொத்த லாபம் ஈட்டும் நிறுவனமாக மாறட்டும்.

நமது தமிழகத்தில் இந்த ஆண்டு நமது வருவாய் அதிகரித்துள்ளது என்பதற்காக நமது தமிழ் மாநில தலைமை பொது மேலாளரும் அனைத்து ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாகர்கோவிலில் அந்த மாவட்டத்தின் சாதனையைக் கொண்டாடும் வகையில் ஊழியர்கள், அதிகாரிகள், ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்க நிர்வாகிகள் கலந்துகொண்ட விழா 11.04.2017 அன்று நடைபெற்றது. இதில் சுமார் 200 பேர் கலந்து கொண்டனர்.



